**கூடுதல் மாவட்ட  நீதிமன்றம், திண்டுக்கல்**

**முன்னிலை : திரு.ஸ்வர்ணம் J ராஜகோபாலன், B.A.B.L.,(Hons.)**
**கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்,**

**2026–ஆம் ஆண்டு  மார்ச் மாதம்  12–ஆம் நாள் வியாழக்கிழமை**

**E.A.No.1/2025**
**in**
**E.P.No.67/2022**
**––––**

பெருமாள் ... மனுதாரர்/ கிளைமெண்ட/3ம் நபர்

–எதிர்–

1. சின்னக்காளை ... 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

2. தீபலெட்சுமி ... 2எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த நிறைவேற்று மனுவானது 11.03.2026 அன்று என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது  மனுதாரர்/ வாதி  தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள்  திரு. K.முருகன் மற்றும் திரு.M.தமிழ்செல்வன் அவர்களும்,  1ம்  எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பாலமுருகானந்தம் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்வதற்கு பல வாய்தாக்கள் வழங்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரின்றி ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார். 2ம் எதிர்மனுதாரருக்கு உரிய அறிவிப்பு சார்வு செய்யப்பட்டும் 2ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை,  அறிவிப்பு சார்வு செய்வதற்கு  போதிய கால அவகாசம் வழங்கப்பட்டபோதும், 2ம் எதிர்மனுதாரரை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்றி ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார். மனுதாரர் தரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, E.P.67/2022ன் உத்தரவுப்படி ஏற்பட்ட கிரைய பதிவை (ஆவண எண்.1088/2023) ரத்து செய்தும், சட்ட விரோதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள E.P.67/2022–ஐ தள்ளுபடி செய்தும், 1ம் எதிர்மனுதாரர் சின்னக்காளை தபசில் கண்ட

சொத்தை ஒரு ஜெயராஜ் என்பவருக்கு 21.02.2023ல் எழுதி 1142/2023 ஆவணமாக நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவை ரத்து செய்தும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 58 மற்றும் பிரிவு 151—ன் கீழ் மனுதாரர்/ கிளைமெண்ட/3ம் நபரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>02. மனுவின் சுருக்கம்:</u>

(அ) மனுதாரர் / கிளைமெண்ட/3ம் நபர், 2ம் எதிர்மனுதாரரிடம் கடந்த 18.10.2017—ல் கொடுத்த ரூ.3,00,000/—த்திற்கான புரோ நோட் கடனை வசூல் செய்ய வேண்டி திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.968/2019—ல் பிரதிவாதி பெற்ற கடனுக்கு தகுந்த செக்யூரிட்டி கொடுக்கக் கோரியும், தவறும் பட்சம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இம்மனுவில் காட்டியுள்ள சொத்தை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்யக் கோரியும் இ.ம.எண்.1/2019 – தாக்கல் செய்து, பிரதிவாதி செக்யூரிட்டி கொடுக்கத் தவறியதால் இம்மனுவில் காட்டியுள்ள பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட அசையாச் சொத்து கடந்த 26.08.2021—ல் உடன் ஜப்தி செய்யப்பட்டு ஜப்தி உத்தரவு நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.15/2021—ம் தேதி பதிவு செய்யப்பட்டு வில்லங்க சான்றிதழும் பதிவாகியுள்ளது. ஜப்தி உத்தரவு 05.08.2022.ம தேதி கூடுதல் சார்பு நீதிமன்றத்தால் Attachment Made Absolute என ஊர்ஜிதம் செய்யப்பட்டு, தற்போதும் ஊர்ஜிதத்தில் உள்ளது. அதன் பின் மேற்படி வழக்கில் கடந்த 05.08.2022—ல் மனுதாரர்/ கிளைமெண்ட/3ம் நபருக்கு சாதகமாக அசல் வழக்கில் தீர்ப்பு பெற்று, அதன் பின் டிக்ரியை நிறைவேற்ற கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் E.P.258/2022 தாக்கல் செய்து எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராக வாய்தா ஏற்பட்டு நிலுவையில் உள்ளது. அதில் எதிர்மனுதாரருக்கு சேரவேண்டிய கடன் பாக்கியை வசூல் செய்ய தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இந்நிலையில், 2ம் எதிர்மனுதாரர் கடன் பெற்ற 18.10.2017ம் தேதியில் இருந்து 1 மாதம் கழித்து 20.11.2017ம் தேதியில் 2ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்தை R.சின்னக்காளை என்பவருக்கு கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அதன்பின் 1ம் எதிர்மனுதாரர் R.சின்னக்காளை என்பவரும், 2ம் எதிர்மனுதாரர் தீபலெட்சுமியும் கூட்டாக சேர்ந்து கொண்டு மனுதாரரிடம் வாங்கிய கடன் தொகையை மோசடி செய்யும் பொருட்டு 20.11.2017ல் ஏற்பட்ட கிரைய

ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.275/2020 என வழக்கு தொடர்ந்து அதில் வேண்டுமென்றே பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் கடந்த 23.11.2021–ல் வாதி சின்னக்காளை தனக்கு சாதகமாக Exparte டிக்ரி பெற்று, மேற்படி டிக்கிரியை நிறைவேற்ற வாதி சின்னக்காளை (1ம் எதிர்மனுதாரர்) நிறைவேற்றுதல் மனு E.P.67/2022 தாக்கல் செய்து அந்தமனுவிலும் மேற்கண்ட தீபலெட்சுமி வேண்டுமென்றே ஆஜராகாமல் Exparte ஆகி அம்மனு மீது கிரையப்பத்திரம் பதிவு செய்ய உத்தரவு ஏற்பட்டு அதே சொத்தின்மீது நீதிமன்ற பற்றுகை ஊர்ஜிதத்தில் உள்ளதாகவும், கிரைய பத்திரம் 18.02.2023ல் நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது E.P.67/2022 பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய 14.03.2023ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது.

(இ) இந்நிலையில், 1ம் எதிர்மனுதாரர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தீர்ப்புக்கு முன் தபசில் சொத்தை ஜப்தி செய்யக்கோரும் I.A.1/2019 in O.S.968/2019 மனுவில் தன்னையும் ஒரு தரப்பினராக சேர்க்கக் கோரும் மனுவை I.A.No.2/2021 ல் 29.09.2021 ல் தாக்கல் செய்து அந்த மனு கடந்த 05.03.2022ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த மனுதாரரிடம் பெற்ற கடன் விபரம், கடனை பெறுவதற்காக மனுதாரர் O.S.968/2019 என்ற வழக்கை தொடர்ந்த விபரம் I.A.1/2019ல் தபசில் சொத்தை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்த விபரம் முதலிய அனைத்தையும் நன்கு தெரிந்து கொண்டே மனுதாரரிடம் பெற்ற கடனை கூட்டுச் சதி செய்து மோசடி செய்யும் எண்ணத்துடன் 20.11.2017ல் தபசில் சொத்தைப் பொறுத்து சட்ட விரோதமாக கிரைய ஒப்பந்தம் செய்துள்ளார். அதனால் 20.11.2017ம் தேதிய கிரைய ஒப்பந்தம் மற்றும் அதைத் தொடர்ந்த 18.02.2023ம் தேதி பதிவு செய்யப்பட்ட தபசில் சொத்தின் கிரையம் முதலியவை சட்டப்படி செல்லத்தக்கதல்ல ரத்து செய்யப்பட வேண்டியவைகளாகும். மேலும் மேற்கண்ட காரணங்களின்படி கிரையப் பத்திரம் பதிந்த 18.02.2023ம் தேதியில் இருந்து 3 நாட்களிலேயே அதாவது 21.02.2023ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் சின்னக்காளை, ஜெயராஜ் என்பவருக்கு தபசில் சொத்தை கிரையம் செய்து கொடுத்து, 1142/2023–ம் ஆவணமாக நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ளது. அந்த கிரைய பத்திரமும், ஏற்கனவே நீதிமன்ற பற்றுகையில் உள்ள

அதே சொத்தை வேறு நபர்களுக்கு கிரைய பத்திரம் பதிவு செய்ய முடியாது என்று நன்கு தெரிந்தே சார்பதிவாளரும் Collusive ஆக செயல்பட்டுள்ளார். அந்த கிரைய பத்திரமும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

(ஈ) மேலும், 1ம் எதிர்மனுதாரர் மேற்கண்ட சொத்தை 2ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து Collusive ஆக கூட்டுச்சதி செய்து நீதிமன்றம் மூலமாக கிரைய பத்திரம் பதிந்துவிட்டதாக 02.03.2023 தேதி வாக்கில் கூறிவந்தார். அதனை கேள்விப்பட்ட இந்த மனுதாரர் கடந்த 02.03.2023ம் தேதி மேற்கண்ட சொத்து குறித்து வில்லங்க சான்று வாங்கி பார்த்தபோது தான் கிரையம் பதிவு செய்யப்பட்ட விபரமும் கிரையப் பத்திரம் பதிந்த 18.02.2023–ம் தேதியில் இருந்து 3 நாட்களிலேயே அதாவது 21.02.2023–ம் தேதியிலேயே இந்த 1ம் எதிர்மனுதாரர் சின்னக்காளை, ஒரு ஜெயராஜ் என்பவருக்கு சொத்தை அவசர அவசரமாக கிரையம் செய்து கொடுத்து, அது 1142/2023–ம் ஆவணமாக நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள விபரமும் இந்த மனுதாரருக்கு தெரியவந்துள்ளது.

(உ) மனுதாரர் 2ம் எதிர்மனுதாரர் கடன் பெற்ற 18.10.2017ம் தேதியில் இருந்து 1 மாதம் கழித்து 20.11.2017ம் தேதியில் அவருக்குப் பாத்தியப்பட்ட அசையாச் சொத்தை இந்த 1ம் எதிர்மனுதாரருக்கு கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்துள்ளார். இந்த கிரைய ஒப்பந்தம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அதன் பின் கிரைய ஒப்பந்தப்படி சொத்தை கிரையம் பெற்று பதிவு செய்துள்ளார். கிரைய ஒப்பந்தம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற நிலையில் இந்த கிரைய ஒப்பந்தம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. இந்த மனுதாரரிடம் வாங்கிய கடனை மோசடி செய்யவே இந்த எதிர்மனுதாரர்கள் கூட்டுச் சதி செய்து Collusive ஆக திட்டமிட்டு கிரைய ஒப்பந்த நடவடிக்கை மற்றும் கிரைய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என நன்கு தெளிவாகிறது. எனவே, E.P.67/2022ன் உத்தரவுப்படி ஏற்பட்ட கிரைய பதிவை (ஆவண எண்.1088/2023) ரத்து செய்தும், சட்ட விரோதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள E.P.67/2022–ஐ தள்ளுபடி செய்தும், 1ம் எதிர்மனுதாரர் சின்னக்காளை தபசில் கண்ட சொத்தை ஒரு ஜெயராஜ் என்பவருக்கு 21.02.2023ல் எழுதி 1142/2023 ஆவணமாக நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவை ரத்து செய்தும் மற்றும் இதர பரிகாரங்கள்

கோரியும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 58 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்/ கிளைமெண்ட/3ம் நபரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

03. 1ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் முன்னிலையானபோதும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்வதற்கு பல வாய்தாக்கள் வழுங்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரின்றி ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார். 2ம் எதிர்மனுதாரருக்கு உரிய அறிவிப்பு சார்வு செய்யப்பட்டும் 2ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை, அறிவிப்பு சார்வு செய்வதற்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டபோதும், 2ம் எதிர்மனுதாரரை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்றி ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார். 1, 2 எதிர்மனுதாரர்கள் இன்று வரை ஒருதலைப்பட்சமாகவே இருந்து வருகிறார்கள்.

04. இம்மனுவில் மனுதாரர்/ கிளைமெண்ட/3ம் நபர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**05. இம்மனுவில் முடிவு செய்ய வேண்டிய சங்கதி யாதெனில், இம்மனு அனுமதிக்கத் தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.**

**<u>06. தீர்வு:</u>**

மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. மனுதாரர் / கிளைமெண்ட/3ம் நபர், 2ம் எதிர்மனுதாரரிடம் கடந்த 18.10.2017–ல் கொடுத்த ரூ.3,00,000/–த்திற்கான புரோ நோட் கடனை வசூல் செய்ய வேண்டி திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.968/2019–ல் பிரதிவாதி பெற்ற கடனுக்கு தகுந்த செக்யூரிட்டி கொடுக்கக் கோரியும், தவறும் பட்சம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இம்மனுவில் காட்டியுள்ள சொத்தை தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்யக் கோரியும் இ.ம.எண்.1/2019 – தாக்கல் செய்து, பிரதிவாதி செக்யூரிட்டி கொடுக்கத் தவறியதால், இம்மனுவில் காட்டியுள்ள பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட அசையாச் சொத்து கடந்த 26.08.2021–ல் உடன் ஜப்தி செய்யப்பட்டு ஜப்தி உத்தரவு நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.15/2021–ம் தேதி பதிவு செய்யப்பட்டு வில்லங்க

சான்றிதழும் பதிவாகியுள்ளது என்றும், ஜப்தி உத்தரவு 05.08.2022–ம் தேதி கூடுதல் சார்பு நீதிமன்றத்தால் Attachment Made Absolute என ஊர்ஜிதம் செய்யப்பட்டு, அசல் வழக்கிலும் கடந்த 05.08.2022–ல் மனுதாரர்/ கிளைமெண்ட/3ம் நபருக்கு சாதகமாக தீர்ப்பு பெற்று, அதன் பின் டிக்ரியை நிறைவேற்ற கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் E.P.258/2022 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது.

07. இந்நிலையில், 2ம் எதிர்மனுதாரர் கடன் பெற்ற 18.10.2017ம் தேதியில் இருந்து ஒரு மாதம் கழித்து 20.11.2017ம் தேதியில் 2ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மனுச்சொத்தை R.சின்னக்காளை என்பவருக்கு கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அதன்பின் 1ம் எதிர்மனுதாரர் R.சின்னக்காளை என்பவரும், 2ம் எதிர்மனுதாரர் தீபலெட்சுமியும் கூட்டாக சேர்ந்து கொண்டு மனுதாரரிடம் வாங்கிய கடன் தொகையை மோசடி செய்யும் பொருட்டு 20.11.2017ல் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.275/2020 என வழக்கு தொடர்ந்து அதில் வேண்டுமென்றே பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் கடந்த 23.11.2021–ல் வாதி சின்னக்காளை தனக்கு சாதகமாக Exparte டிக்ரி பெற்று, மேற்படி டிக்கிரியை நிறைவேற்ற வாதி சின்னக்காளை (1ம் எதிர்மனுதாரர்) நிறைவேற்றுதல் மனு E.P.67/2022 தாக்கல் செய்து அந்தமனுவிலும் மேற்கண்ட தீபலெட்சுமி வேண்டுமென்றே ஆஜராகாமல் Exparte ஆகி அம்மனு மீது கிரையப்பத்திரம் பதிவு செய்ய உத்தரவு ஏற்பட்டு அதே சொத்தின்மீது நீதிமன்ற பற்றுகை ஊர்ஜிதத்தில் உள்ளதாகவும், கிரைய பத்திரம் 18.02.2023ல் நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது E.P.67/2022 பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய 14.03.2023ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கிரையப் பத்திரம் பதிந்த 18.02.2023ம் தேதியில் இருந்து 3 நாட்களிலேயே அதாவது 21.02.2023ம் தேதி 1ம் எதிர்மனுதாரர் சின்னக்காளை, ஜெயராஜ் என்பவருக்கு தபசில் சொத்தை கிரையம் செய்து கொடுத்து, 1142/2023–ம் ஆவணமாக நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ளது என்றும், எனவே, மேற்படி கிரைய பத்திரமும்

சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று மனுதாரர்/ கிளைமெண்ட/3ம் நபர் தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

08. 1ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் முன்னிலையானபோதும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்வதற்கு பல வாய்தாக்கள் வழங்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரின்றி ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரருக்கு உரிய அறிவிப்பு சார்வு செய்யப்பட்டும் 2ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை, அறிவிப்பு சார்வு செய்வதற்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டபோதும், 2ம் எதிர்மனுதாரரை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்றி ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார். 1, 2 எதிர்மனுதாரர்கள் இன்று வரை ஒருதலைப்பட்சமாகவே இருந்து வருகிறார்கள். எதிர்மனுதாரர்கள் இம்மனுவில் முன்னிலையாகி, மனுதாரர் முன் வைத்த சங்கதிகளை மறுத்து தங்களது எதிர்வாதத்தை முன்வைக்க தகுந்த வாய்ப்பு வழங்கப்பட்டும், எதிர்மனுதாரர்கள் முன் வராததால் மனுதாரர்/ கிளைமெண்ட/3ம் நபர் கோரியபடி இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,** நிறைவேற்று மனு எண்.67/2022–ன் உத்தரவுப்படி ஏற்பட்ட கிரைய பதிவை (ஆவண எண்.1088/2023) ரத்து செய்தும், நிறைவேற்று மனு எண்.67/2022–ஐ தள்ளுபடி செய்தும், மனுவில் கண்ட சொத்தைப் பொறுத்து 1ம் எதிர்மனுதாரர் சின்னக்காளை, ஜெயராஜ் என்பவருக்கு 21.02.2023–ம் தேதி எழுதிக்கொடுத்த (ஆவண எண்.1142/2023) நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவை ரத்து செய்தும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லி, அவரால் கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை திருத்தி, இன்று 2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.16 11:14:28 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் :</u>**

ம.சா.1– பெருமாள்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1– | *** | O.S.986/2019–ன் மனுதாரர் தீபலெட்சுமி மீது தாக்கல் செய்த வழக்கின் பிராது. | உண்மை நகல் |
| ம.சா.ஆ.2– | 05.08.2022 | திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்ற O.S.968/2019–ன் தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3– | 19.08.2021 | திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்ற O.S.968/2019–ன் I.A.1/2019 மனு மற்றும் அதன் உத்தரவு | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4– | 16.09.2021 | ஜப்தி செய்ததற்கான SRO Memo | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5– | 26.08.2021 | ஜப்தி செய்ததற்கான அமீன் வாரண்ட் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6– | -- | மனுச்சொத்து சம்பந்தமான வில்லங்க சான்று (01.01.2000 முதல் 02.03.2023 வரை) | கணிணி பதிவிறக்க நகல் |
| ம.சா.ஆ.7– | -- | திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நிறைவேற்று மனு எண்.258/2022 மனு | ஒளி நகல் |

SWARNAM J RAJAGOPALAN Digitally signed by SWARNAM J RAJAGOPALAN Date: 2026.03.16 11:14:35 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.